**TAMIL NADU POLICE**
INTEGRATED INVESTIGATION FORM-I

# FIRST INFORMATION REPORT
## முதல் தகவல் அறிக்கை
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

Under section 173 BNSS

C 8129399

1. District : கடலூர் மாவட்டம் | PS: ஊ.த.க. பிரிவு காவல்நிலையம் | Year: 2025 ஆண்டு | FIR No.: 2/2025 மு.த.அ. எண் | Date: 14.02.2025 நாள்

2. (i) Act சட்டம்: The Prevention of Corruption Act — Sections பிரிவுகள்: 7
   (ii) Act சட்டம்: 1988 as amended by The Prevention — Sections பிரிவுகள்:
   (iii) Act சட்டம்: Corruption (Amendment) Act 2018 — Sections பிரிவுகள்:
   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் — Date from நாள் முதல் 12.02.2025 — Date to : நாள் வரை
   Time Period : நேர அளவு — Time from நேரம் முதல் 11.30 hrs — Time to : நேரம் வரை
   (b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 14.02.2025 — Time : நேரம் 1430 hrs
   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் Vol - I — Time : நேரம் 1430 hrs

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக — தட்டச்சு புகார் மனு

5. Place of Occurrence (a) Direction and Distance from PS:
   குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் — சுமார் 65 கி.மீ. தென்மேற்கு.
   Beat Number : முறைக் காவல் எண் — (b) Address : முகவரி — நேரடி நெல் கொள்முதல் நிலையம், தரசூர்
   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : -- இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் — District : -- மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் — குலோத்துங்கன்
   (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் — ராசாங்கம்
   (c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு — 65
   (d) Nationality : நாட்டினம் — இந்தியன்
   (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
   Date of Issue : வழங்கப்பட்ட நாள் — ---
   Place of Issue : வழங்கப்பட்ட இடம் — ---
   (f) Occupation : தொழில் — விவசாயம்
   (g) Address : முகவரி — நெ.22, புதுத்தெரு, தரசூர், சிதம்பரம் தாலுக்கா, கடலூர் மாவட்டம்.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
   தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

   **வேலுமணி, மேஸ்திரி, நேரடி நெல் கொள்முதல் நிலையம், தரசூர்.**

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
   குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

   **மகளை கல்லூரியில் சேர்க்கும் வேலை இருந்ததால் தாமதம்.**

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

<u>**பணிந்துசமர்ப்பிக்கப்படுகிறது :**</u>

அனுப்புநர், குலோத்துங்கன் வயது–65, த/பெ. ராசாங்கம், No.22–புதுத்தெரு, தரசூர், சிதம்பரம் தாலுக்கா, கடலூர் மாவட்டம், செல்–9965260027, பெறுநர் உயர்திரு ஆய்வாளர் அவர்கள், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, கடலூர், அய்யா, நான் கடலூர் மாவட்டம் சிதம்பரம் தாலுக்கா தரசூர் கிராமத்தில் வசித்து வருகிறேன். நான் இந்திய இராணுவத்தில் பணிபுரிந்து ஓய்வு பெற்று தற்போது தரசூர் கிராமத்தில் உள்ள எனக்கு சொந்தமான சுமார் 10 ஏக்கர் நிலத்தில் நெல் பயிர் விவசாயம் செய்து வருகிறேன். கடந்த 10.02.2025 ஆம் தேதி எனது நிலத்தில் நெல்லை

(தொடர்ச்சி பக்கம் –3)

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed T.V.S. Sundararaj, Inspector Rank ........ to take up the Investigation / Refused Investigation / transferred to PS. V&AC, Cuddalore on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ................................ பதவி ........................ நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ................................................ காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு
[signature]

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்
[signature] 14/02/2025

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும் 14-02-2025 at. 16.30 hrs.

Name: பெயர் P. ANBALAGAN
Rank: நிலை INSPECTOR, V&AC Cuddalore.

அறுவடை செய்து எங்கள் ஊரில் உள்ள நேரடி நெல் கொள்முதல் நிலையத்தில் விற்பனை செய்ய வேண்டி கொண்டு போய் இறக்கி வைத்துள்ளேன். எனது நிலத்தில் விளைந்த நெற்பயிர்களுக்கான சிட்டா மற்றும் அடங்கல் பெற்று கடந்த 12.02.2025 ஆம் தேதி காலை 11.30 மணிக்கு தரசூரில் உள்ள நேரடி நெல் கொள்முதல் நிலையத்தில் சென்று அங்கு அலுவலகத்திற்கு முன்பு நின்றுகொண்டிருந்த மேஸ்திரி வேலுமணி என்பவரை பார்த்து, நான் கொண்டு வந்துள்ள நெல்லை கொள்முதல் செய்வதற்கு நான் யாரை பார்க்கவேண்டும் என்று கேட்டேன். அதற்கு அவர் இங்கு எல்லாமே நான்தான், நான் சொல்றபடிதான் எல்லாம் நடக்கும் என்று சொன்னார். அவரிடம் நான் கொண்டு வந்துள்ள நெல்லை கொள்முதல் செய்வதற்கு ஏற்பாடு செய்யுங்கள் என்று சொன்னேன். அதற்கு அவர் என்னிடம், "நீங்கள் கொண்டு வந்துள்ள நெல் தோராயமாக 300 மூட்டைகள் வரும், மூட்டைக்கு ரூ.55 வீதம், மொத்தமாக ரூ.16,500/– கொண்டு வந்து கொடுத்தால் ஈரம் தரம் பார்க்காமல், அதிகமாக தூற்றாமல் உடனடியாக உங்கள் நெல்லை எடைபோட்டு எடுத்துக்கொள்ள ஏற்பாடு செய்கிறேன், நீங்க காசு கொடுக்கலனா உங்க நெல் ஈரமா இருக்கு, தரம் இல்லைனு சொல்லி களத்துலயே கிடக்குமாறு செய்துவிடுவேன். இதனால் எடை குறைந்து உங்களுக்கு நஷ்டம் ஏற்பட்டுவிடும், ஒன்னும் கணக்கு பார்க்காதீங்க நான் கேட்ட பணத்தை கொடுத்துடுங்க" என்று சொன்னார். அதற்கு நான் மேஸ்திரி வேலுமணியிடம் இந்த பணம் அரசாங்கத்திற்கு செலுத்த வேண்டிய பணமா என்று கேட்டேன். அதற்கு அவர் இது அரசாங்கத்திற்கு சேர வேண்டிய பணம் கிடையாது என்றும், நீங்க கொண்டு வந்திருக்கும் நெல்லை ஈரம் தரம் பார்க்காமல், அதிகமாக தூற்றாமல் உடனடியாக எடுத்துக்கொள்வதற்காக எனக்கு கொடுக்க வேண்டிய பணம் என்றும் சொன்னார். நான் அவரிடம் பிறகு வருவதாக சொல்லிவிட்டு வீட்டிற்கு வந்துவிட்டேன். பின்னர் வீட்டிற்கு வந்து நான் யோசித்து பார்த்ததில் லஞ்சம் கொடுத்து நெல் மூட்டைகளை விற்பனை செய்ய எனக்கு விருப்பம் இல்லை. எனவே என்னிடம் தரசூர் அரசு ரேடி நெல் கொள்முதல் நிலையத்தில் எனது நெல் மூட்டைகளை எடுத்துக்கொள்ள லஞ்சம் கேட்ட மேஸ்திரி வேலுமணி மீது நடவடிக்கை எடுக்க லஞ்ச ஒழிப்பு துறையில் புகார் கொடுக்க முடிவு செய்தேன். எனது மகளை கல்லூரியில் சேர்க்கும் வேலை இருந்ததால் என்னால்

14/02/2025
(P. ANBALAGAN)

உடனடியாக வந்து புகார் கொடுக்க இயலவில்லை. அதனால் நான் இன்று தங்களிடம் வந்து என்னிடம் ரூ.16,500/– லஞ்சம் கேட்ட மேஸ்திரி வேலுமணி மீது நடவடிக்கை எடுக்க வேண்டி புகார் கொடுக்கிறேன். அவர் என்னிடம் லஞ்சமாக கேட்ட பணம் ரூ.16,500/– ஐ கொண்டு வந்துள்ளேன். இப்படிக்கு, (ஒப்பம்.xxxx)

Sir,

Received the above computer typed complaint on 14.02.2025 at about 14.30 hrs., and preliminary verification was made on the genuineness of the complaint through sources and found to be genuine. The integrity and antecedents of the accused were also verified through sources and found to be bad. Hence, I registered a case in Cuddalore Vigilance and Anti-Corruption in Cr.No.2/2025, U/s 7 of the Prevention of Corruption Act, 1988 as amended by the Prevention of Corruption (Amendment) Act, 2018 on 14.02.2025 at 16.00 hrs., sd/-xxxxx 14/02/2025 (P.Anbalagan), Inspector of Police, V & AC, Cuddalore.

இதன் அசலை வாதியின் புகார் மனுவுடன் இனைத்து கனம் தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர் மற்றும் சிறப்பு நீதிபதி ஊழல் தடுப்பு வழக்குகள் நீதிமன்றம் அவர்களுக்கும், இதர நகல்களை உரிய அதிகாரிகளுக்கும் பணிந்து சமர்ப்பிக்கிறேன்.

14/02/2025

(P. ANBALAGAN),
Inspector of Police,
V & AC, Cuddalore.